1383. கயிறு இல்லாத பம்பரம்.

A top without a string.

1384. கூத்தியார் பிள்ளைக்குத் தகப்பன் யார்?
Who is the father of the harlot's child ?

Her children have no legal father. The proverb is used on occasions when a head or master is wanting to an affair.

1385. தலை இருக்க வால் ஆடுமோ?
While the head is still, will the tail wag ?

The servant can do nothing except on the initiative of his master.

MISCELLANEOUS PROVERBS ON AUTHORITY.

1386. எசமான் வெளியே போனால் பசங்கள் எல்லாம் கும்மாளம் போடுவார்கள்.
When the master is out all the children and servants romp about.

" *When the cat's away, the mice will play.*"

1387. எருது (or ஆடு) நினைத்த இடத்தில் தொழும் (or பட்டி) கட்டுகிறதா?
Are we to build the stall (*or* fold) where the bullock (*or* sheep) thinks proper ?

" *An ass must be tied where the master will have him.*"

1389. தலைக்குமேல் குடை இருக்கிறது.
There is an umbrella over my head. 299, 300.

There is authority over me to protect me. The umbrella always signifies *dignity* and *authority* in India.

1390. வாத்தியாரை மெச்சின பிள்ளை இல்லை.
There is no child that praises its teacher. 3640.

No servant is satisfied with his master.

1390*a*. பாழ் ஊருக்கு நரி ராஜா.
A jackal is the king in a deserted village.

To rule over something worthless.

" *King among cobblers.*"

LIKE MASTER, LIKE SERVANT.

1391. குருவுக்கு எற்ற சிஷன்.
A disciple suited to his spiritual teacher (*guru*). 475, 2286

1392. தான் அடங்க, தன் குலம் விளங்க.
If he be humble, his caste will be notable. 856.

" *A good Jack makes a good Jill.*"

1393. பரதம் எப்படி பக்தர்கள் அப்படி.
As is the Mahâbhârata, so are its devotees.

" *Water never rises above its level.*"

1394. *ராஜன் எவ்வழி, குடிகள் அவ்வழி.*

As is the king, so are his subjects.

The masses will behave like their superiors.

1395. *ராமனைப்போல் ராஜா இருந்தால். அனுமானைப்போல் சேவகனுமிருப்பான்.*

If the King is like *Rama*, his servant will be like *Hanuman*.

A good master makes a good servant. The Râmâyana tells of the faithful service that the monkey-god *Hanuman* rendered to *Rama*.

Cf. 2259 *ff.*

MANY MASTERS.

1396. *ஆர் ஆருக்கு ஆளானேன், ஆகாத உடம்பையும் புண்ணாக்கிக்கொண்டு?*

To whom am I to submit? My worthless body is all ulcerated.

Said in disgust by one who has too many masters.

"*The ass of many owners is eaten by the wolf.*"

1397. *ஆளுக்கு ஒரு குட்டுக் குட்டினால், அடியேன் தலை மொட்டை.*

Being buffeted by every one, miserable creature that I am, my head has become bald!

Said by one who is ill-treated by everybody, or by one who has a small income and out of it lends various little sums to different persons, till he is helpless himself.

"*A pot that belongs to many is ill stirred and worse boiled.*"

1398. *ஊருக்கு ஒரு தேவடியாள் ஆருக்கு என்று ஆடுவாள்?*

The village has only one dancing-girl; for whom is she to dance?

As all want her services, she is not only in doubt where to go, but also suffers from being overworked. Very commonly said by a daughter-in-law who comes from a poor home and who is therefore despised and overworked by her mother-in-law's household.

1399. *ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி?*

One who is a cripple in a village becomes a mendicant at *Ganesa's* temple. 3351.

Ganesa's temple is not highly esteemed, and there is no money to be had there, so the case of the mendicant who takes up his abode there is likely to be a hard one. A member of a family or a servant who is despised by all and required to do all sorts of work says this about himself, or another says it about him.

1400. *ஒரு கூடைகல்லும் தெய்வமானால், கும்பிடுகிறது எந்தக் கல்லை?*

If all the stones in a basket are gods, which stone am I to worship?

If all are masters, who is to be obeyed?

1401. *ஒட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி.*

For a leaky ship there are nine captains.

Said when there are many heads to a profitless undertaking.

20

1402. கஞ்சி வார்க்க ஆளில்லாமல்போனாலும், கச்சை கட்ட ஆளிருக்கிறது.
Though there is no man to pour out the gruel, there will be somebody to tie the girdle (*i. e.*, to quarrel). 1144.

If a woman has no protector, and yet manages to provide for herself, everything that she does will be criticised, and she will get all sorts of contrary orders.

1404. பிடித்தவர்களுக்கு எல்லாம் பெண்டு?
(I am a) woman that everybody can take hold of!

Said by a woman who is disgusted by having too many masters in the house. If her husband is too easy going and his brothers begin to order her about, a woman will say this. It is also said of a woman of light virtue.

"*Better master one than engage with ten.*"

EXAGGERATION.

அதிகமாக்குதல்.

1405. ஈரைப் பேனாக்கிப், பேனைப் பெருமாள் ஆக்குகிறான்.
He makes a nit a louse, and a louse into the God Vishnu.

"*To make a mountain of a mole hill.*"

1406. ஒன்றைப் பத்தாகவும், பத்தை ஒன்றாகவும் சாதிக்கிறான்.
He maintains that one is ten, and ten is one.

1407. கண்ணாரக் காணாதது மூன்று பங்கு.
What he has not seen is three times what he has seen.

1408. துரும்பைத் தூணாக்கிறதா?
Do you make a straw into a pillar?

EXCESS AND DEFICIENCY.

அதிகம்.

"TOO LITTLE AND TOO MUCH SPOILS EVERYTHING."

1409. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்.
If taken in excess even nectar is poisonous. 1304.

1410. அறக்குழைத்தாலும் குழைப்பாள், அரிசியாய் இறக்கினாலும் இறக்குவாள்.
She will either boil the rice too much, or not boil it at all.

Said of a person who goes to extremes.

1411. கரும்பை விரும்ப விரும்ப வேம்பு.
If you constantly long for (and eat) sugarcane, it will become bitter *margosa* (to you).

The leaves and the oil of the *Margosa (Azadirachta Indica)* are very bitter.

"*More than enough breaks the cover.*"

1412. சேரச் சேரச் செடியும் பகை.
If you draw too near, even a plant will hate you. 2773.
" *You can have too much of a good thing.*"

1413. நித்தம் போனால் முற்றம் சலிக்கும்.
If you go daily (to see the same people), the entrance of their house will be disgusted. 2744, 2755.
" *Familiarity breeds contempt.*"

1414. படுக்கப் படுக்கப் பாயும் பகை.
If you lie down too often, your bed (mat) will hate you.

1415. பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
If you constantly drink milk, it will become sour to you.
A constant guest is never welcome.

1416. பெய்தும் கெடுத்தது, காய்ந்தும் கெடுத்தது.
If it rains, the crop is spoiled; if there is a drought, it is also spoiled.

1417. வைத்தியன் பிள்ளை நோவு தீராது, உவாத்தியர் பிள்ளைக்குப் படிப்பு வராது.
The sickness of a doctor's child will not be cured, and a teacher's child will not learn.
The doctor gives too much medicine, and the teacher overdoes his teaching.

ABUNDANCE.

அளவு.

1418. இத்தனை அத்தனையானால், அத்தனை எத்தனையாகும்?
If this amounts to that, how much will that be?

1419. கழுதைப் புட்டை கை நிரம்பினால் போதும்.
He is satisfied if he gets his hands full of asses' dung! 3076.
Said of one who looks to the quantity rather than the quality of his profits.
" *A bellyful is a bellyful whether it be meat or drink.*"

1420. கொசுவு மூத்திரம் குறுணி.
The urine of a mosquito is plentiful!
No want of worthless things.

1421. மலிந்த சரக்கு (or பண்டம்) கடைத்தெருவுக்கு வரும்.
When there is plenty of grain (*or* provision), it will come to the bazaar-street for sale. 2582.
If sin abounds, or is not kept with in limits, it will come to the knowledge of the public.

1422. விரல் உரல் ஆனால், உரல் என்ன ஆகும்?
If a finger becomes as big as a rice-mortar, how big will the rice-mortar become? 2048.

RARITY, SCARCITY.

அருமை.

1423. அத்திப் பூ கண்டதுபோல.
Like seeing the flower of a fig tree. 1427, 1428.
The blossom of the fig is not to be distinguished from the fruit itself. Said in joy on seeing a friend whom one has not seen for a long time.

1424. அன்னப்பிடி வெல்லப்பிடி ஆச்சுது.
A handful of rice has become (as dear) as a handful of sugar. 1429, 1430.

1425. உத்தியோகம் குதிரைக் கொம்பாயிருக்கிறது.
Employment has become like the horns of a horse.
" *It is as rare as hen's teeth.*"

1426. ஒரு துட்டு ஒரு ரூபாயாயிருக்கிறது.
A small copper coin is now a rupee!

1427. கார்த்திகைப் பிறை கண்டவன்போல.
Like the man who saw the new moon in November (*Kârttikei*).
A rare sight, as the sky is overcast with clouds in this rainy month.

1428. காற்றிலே கருப்பிலே கண்டதில்லை (or நினைக்கவில்லை).
I have not seen him either in storm or in famine.
These two are rare, so the proverb is used of rare visitors.

1429. சோறு வெல்லமாய்ப் போச்சுது.
Boiled rice has become sugar. 1424, 1739.
i.e., Rice has become as dear as sugar.

1430. பிண்டம் பெருங்காயம், அன்னம் கஸ்தூரி.
Food has become (as dear as) assafœtida, and rice (as rare as) musk.
" *In ill years straw is corn.*"

SUPERABUNDANCE.

அருமையில்லாமை.

1431. அணிற்பிள்ளைக்கு நுங்கு அரிதோ, ஆண்டிச்சி பிள்ளைக்குச் சோறு அரிதோ?
Is palmyra fruit a rarity to a squirrel? Is rice a rarity to a beggar-woman's child?
A sarcasm on the 'poverty' of religious mendicants.

1432. இருளன் பிள்ளைக்கு எலிக்குஞ்சு கருப்பா?
Does a hunter's son ever find a scarcity of young rats.
This caste eats rats, and rats are never scarce.

1433. உரல் பஞ்சம் அறியுமா?
Does the rice-mortar experience the famine?
Nearly all food stuffs are pounded in it before being cooked, and even in famine times there is something to be pounded.

1434. கலியாணத்திலும் பஞ்சமில்லை, களத்திலும் பஞ்சமில்லை.
At a wedding and on the threshing-floor there is no scarcity.
No one need be hungry at the one or on the other.

1435. கொண்ட கடையிலேயா விற்கிறது?
Should you sell things in the very shop where you bought them?

1436. கொல்லன் தெருவிலே ஊசி விற்கிறதா?
Why sell needles in a blacksmith's street?
"*Carrying coals to Newcastle.*"

1437. தீப்பட்ட வீட்டிலே கரிக்கட்டை பஞ்சமா?
Is there any lack of charcoal in a house that has been burnt down.

1438. வேடனுக்குத் தேன் பஞ்சமா? மூடனுக்கு அடி பஞ்சமா?
Is a hunter ever in want of honey; does a fool ever lack a beating.

EXPERIENCE.

அனுபோகம்.

LEARNING BY EXPERIENCE.

1439. அப்பன் அருமை அப்பன் செத்தால் தெரியும், உப்பின் அருமை உப்பில்லாதேபோனால் தெரியும்.
The worth of a father is only known at his death, and the worth of salt is only known when it is lacking. 1288.
"*You never miss the water till the well goes dry.*"

1440. காவடிப்பாரம் சுமக்கிறவனுக்குத் தெரியும்.
He who bears the yoke knows its weight. 1447.
The yoke or *Kavadi* here referred to is that used when anything dedicated to a deity is carried to the temple by the person who has offered it.
"*No one knows the weight of another's burden.*"

1441. தலைநோவும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்.
If one gets head-ache and fever himself he will know what they are.
"*He laughs at scars who never felt a wound.*"

1442. நிழல் அருமை வெயிலில் போனால் தெரியும்.
If you walk in the sun, you will know the blessedness of (being in the) shade.
"*Health is not valued till sickness comes.*"

1443. பட்டால் தெரியும் பறையனுக்கு.
A Pariah will learn if he suffers.
" *Adversity makes a man wise, not rich.*"

1443*a*. பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு, கெட்டால் தெரியும் கோமுட்டிக்கு.
A Brahmin will learn if he suffers, and a *Komutti* will learn if he is ruined!

A Brahmin will only behave well after suffering, and a *Komutti* will be brought to his senses by losing the capital he has invested. The *Komutti* caste is a class of rich merchants.

1444. பார்த்தால் தெரியுமா, பட்டால் தெரியுமா வருத்தம்?
Is it by beholding pain or by suffering pain yourself that you learn to understand it?
" *Experience teaches.*" " *Need makes the old wife trot.*"

Cf. 1288 *ff.*

"EVERY MAN KNOWS BEST WHERE HIS OWN SHOE PINCHES."

1445. எருது நோய் காக்கைக்குத் தெரியுமா?
Does a crow know what pain it causes a bullock?

Crows frequently get on the back of bullocks and peck at any sores they may find.

1446. கண்ணுக்குப் புண்ணுமல்ல, காண்பார்க்கு நோவுமல்ல.
(Mine is) a disease which the eye cannot see; and lookers-on do not notice it.

i.e., The pain is real, but secret.
" *Every heart knows its own bitterness.*"

1447. சுமை எடுப்பவனுக்குச் சுமை பளுவு தெரியும்.
He who carries the burden knows the weight of it. 1440.

1448. நோயாளிக்குத் தெரியும் நோயின் வருத்தம்.
The sick person knows the pain of his malady.
" *I know best where the shoe wringeth me.*"

1449. முட்டை இடுகிற கோழிக்கு வருத்தம் தெரியும்.
The hen that lays the egg knows the pain.

MISCELLANEOUS PROVERBS ABOUT EXPERIENCE.

1450. இடைச்சன் பிள்ளைக்காரிக்குத் தலைச்சன் பிள்ளைக்காரி மருத்துவம் பார்த்தாற்போல.
Like the woman who had only borne one child, but wanted to be midwife to one who was going to have her second child. 3325.

1451. இறைச்சி தின்கிறவன் கடுப்புக்கு மருந்து அறிவான்.
A flesh-eater knows the medicines for (stomach) complaints.

Flesh-eating is considered abominable by large sections of Hindus.

1452. கலப்பணத்தைவிட, ஒரு கிழப்பிணம் நல்லது.
An old corpse is better than a big measure full of money. 3628.

The experience of the aged is worth more than money.

1453. காதவழி போய் அறியாதவன் மாதம் எல்லாம் நடந்தானும்.
He who had never walked ten miles, is said to have walked the whole month (before he had advanced ten miles).

Having no experience in walking, he was unable to make progress quickly.

1454. குடியிருந்து பார், கூட்டுப்பயிர் இட்டுப்பார்.
Learn to know people by living with them, and by farming with them. 1713.

Know people by mingling with them in daily life.

1455. தேவடியாள் பீ எடுத்தாற்போல.
Like a dancing-girl wiping a child.

A dancing girl is supposed to have no children, so she does not know how to keep them clean. Said of one who tries to mend a matter, but lacks experience and makes things worse than they were before.

1456. தொட்டுக் காட்டாத வித்தைச் சுட்டுப்போட்டாலும் வராது.
Learning not acquired from practical example will never become your own, even if it is branded on you. 3566.

The teacher must exemplify his teaching if the disciple is really to grasp it.

"*Practice not your art, and it will soon depart.*"
"*Precepts may lead, but examples draw.*"
"*The example of good men is visible philosophy.*"
"*Religion is best understood when most practiced.*" (*Cf.* John 7, 17.)

1457. நேற்று வெட்டின கிணற்றிலே முந்தாநாள் வந்த முதலைபோல.
Like the crocodile that came the day before yesterday into the well that was only dug yesterday.

Said sarcastically about some one who professes long acquaintance with what he has only recently learned.

1458. பட்டா உன் பேரில், சாகுபடி ஊரிலே (or என்மேலே).
The deed is in your name, the fruits of the cultivation are enjoyed by the village (*or* by me).

One has the right, another the profit. Said when a married woman lives with a man who is not her husband.

"*Wealth is not his who gets it, but his who enjoys it.*"

1459. புதிய வண்ணானும், பழைய அம்பட்டனும் தேடு.
Get a new washerman and an old barber! 1461.

With the former muscular exertion is all that is wanted; with the latter, skill.

"*A barber learns to shave by shaving fools.*"

1460. மலடிக்குத் தெரியுமா பிள்ளையைப் பெற்ற அருமை?
Does a barren woman understand the joy of motherhood?
"*He who has no children knows not what is love.*"

1461. வால ஜோசியனும், விருத்த வைத்தியனும் நன்று.
A young astrologer and an aged doctor are best. 1459.
" *An old physician, a young lawyer.*"

1462. வீட்டைக் கட்டிப்பார், கலியாணம் செய்துபார்.
Build a house and see what happens, marry and see what happens. 3514.
Only actual experience will reveal the cost of a house and the expense of a wedding.
" *Building and marrying of children are great wasters.*

PRACTICE, EXPERTNESS.

பழக்கம், அப்பியாசம்.

1463. அப்பியாசம் கூசா வித்தை.
Practice is the science that gives confidence.
" *Practice makes perfect.*"

1464. அப்பியாசம் குல விருது.
Expertness in an art is the glory (*lit.* trophy) of a caste.

1465. அரைச்சொற்கொண்டு அம்பலம் ஏறினால், அரைச்சொல் முழுச்சொல்லாமா?
If one attempts to gain popularity with half a word (*i.e.*, with little learning) will his half word ever become a whole word? 1466.

1466. அறையில் ஆடியல்லவோ அம்பலத்தில் ஆடவேண்டும்.
It is only after practising in a room, that one may perform in public. 1465.
" *By working we become workmen.*"

1466*a*. ஊமையன் பேச்சு பழகின பேருக்குத் தெரியும்.
Those who are used to the signs (*lit.* speech) of the dumb, understand them.
" *Custom makes everything easy.*"

1467. எந்த ஆயுதமும் தீட்டத் தீட்டக் கூர்.
The more any weapon is whetted, the sharper (it becomes). 2083.
Every one needs continual discipline to become good.

1468. ஒரு கூண்டு முடைந்தவன் ஒன்பது கூண்டு முடைவான்.
He who can plait one basket will plait nine.
" *He that makes one basket may make a hundred.*"

1469. சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்.
By practising the hand you learn how to draw pictures, by practising the tongue you learn to speak classical Tamil.
" *All things are difficult before they are easy.*"

Cf. 1881 *ff.*

KNOWLEDGE.

அறிவு.

TO KNOW ONE'S SELF.

1470. கணக்கன் கணக்கு அறிவான், தன் கணக்கைத் தான் அறியான்.
An accountant knows others' accounts, but not his own.
People can advise others but do not apply their knowledge to themselves.

1471. கல்வி கற்கிறதைவிட, தன் கருத்து ஆராய்கிறது நன்மை.
It is better to investigate one's own thoughts than to study science.
" *A handful of good life is better than a bushel of learning.*"
" *Self-examination is a good medicine for the soul.*"

1472. தன்னை அறிந்தவன், தலைவனை அறிவான்.
He who knows himself will know the Ruler (*i.e.*, God).
" *A disease known is half cured.*"
" *It is a great point of wisdom to find out one's own folly.*"

MAN'S KNOWLEDGE LIMITED.

அறிவு, கல்வி.

1473. எத்தனை வித்தை கற்றாலும், செத்தவனைப் பிழைப்பிக்க அறியான்.
However much you learn, you do not know how to raise the dead. 1502.
Hindus sometimes say this about Europeans.

1474. எல்லாம் அறிந்தவனுமில்லை, ஒன்றும் அறியாதவனுமில்லை.
No one knows everything, nor is there anyone who does not know something.
" *No living man all things can.*"

1475. கண்ணில் கண்டது கோடி, காணாதது அனந்தம் கோடி.
What we have seen with our eyes is very much, but what we have not seen is infinite.
" *Half the world knows not how the other half lives.*"

1476. கற்றது கையளவு, கல்லாதது உலகளவு.
What we have learned is a handful, what we have not learned is a world in quantity.

1477. காசிமுதல் ராமேஸ்வரம்வரையில் தெரிந்தவன்.
He knows everything from Benâres to Râmêsvaram. 1805.
i.e., He knows everything in the land of India. Ironical.
" *Jack of all trades and master of none.*"

1478. காட்டில் புதைத்த கனதனமும், பாட்டில் புதைத்த பழம்பொருளும், வீட்டின் மனையாள் மனமும், அறிவது அரிது.

In the country it is difficult to know these three things: the treasure buried in the forest, the old meaning buried in a song, and the heart of the mistress of a house.

1479. குறை அறக் கற்றவன் கோடியில் ஒருவன்.

A learned man without defects is one among ten millions.

A LEARNED FOOL.

1480. அறக்கூர்மை முழுமொட்டை.

A sharp blade (gives) a good shave.

Said of a man who gets himself into trouble through his own over-cleverness.

"*A mere scholar is a mere ass.*"

1481. கற்றறி மோழை.

Though learned yet stupid.

1482. கெட்டிக்கார முட்டாள்.

Clever, but a fool.

"*Folly and learning often dwell together.*"

1483. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.

A parrot will only say what it is taught. 510*a*, 1539.

This is explained in the Mahâbhârata thus:—கிளி எவ்வளவு கற்றுக் கொண்டாலும், பூனை பிடித்தால், "அம்மா, பூனை பிடிக்கிறது" என்று சொல்லாது, However much a parrot may learn, it is unable to cry out: "Mother, the cat is laying hold of me," if the cat seizes it.

"*All is but lip wisdom that wanteth experience.*"

1484. படித்து முட்டாளாயிருக்கிறான்.

He has studied, but is a fool.

1485. மெத்தப் படித்தவன் பைத்தியக்காரன்.

He who has much learning is mad.

"*Thy much learning doth turn thee to madness.*" (Act. 26, 24.)

Cf. 1221 *ff.*

MISCELLANEOUS SAYINGS ON LEARNING AND LEARNED MEN.

1486. அவிவேகி உறவிலும், விவேகி பகையே நன்று.

Better is the hatred of a learned man than the friendship of a fool.

"*A friend's frown is better than a fool's smile.*"

1487. அறப்படித்தவன் அங்காடிபோனால், விற்கவுமாட்டான், கொள்ளவுமாட்டான்.

If a very learned man goes to the market he will neither sell nor buy. 1507.

A sneer at learning as having nothing to do with matters of common life.

"*Experience without learning is better than learning without experience.*"

1488. அறிய அறிய கெடுவார் உண்டா?

Will any one suffer by constantly exerting himself to learn?

1489. அறிவு ஆர் அறிவார்? ஆய்ந்தவர் அறிவார்.

Who comprehends knowledge? He who reflects.

1490. அறிவு பெருத்தோன் நோய் பெருத்தோன்.

He who increases knowledge, increases sorrow.

"*For in much wisdom is much grief.*" (Ecclesiastes 1, 18.)

1491. உடைமை என்பது கல்வியுடைமை.

Wealth of learning is (true) wealth.

1492. எழுத வழங்காத வாழ்வு கழுதை புரண்ட களம்.

The life of one who cannot write is like the threshing-floor where an ass has been rolling.

"*Better unborn than untaught.*"

1493. கசடான கல்வியினும் கல்வியீனம் நலம்.

Ignorance is better than imperfect learning.

"*Better untaught than ill taught.*"

1494. கண்டதைக் கற்கப் பண்டிதன் ஆவான்.

He who studies what he sees will become a learned man.

1495. கல்லாதவரே கண்ணில்லாதவர்.

A man without learning is a man without eyes.

1496. கல்லாதார் செல்வத்திலும் கற்றார் வறுமை நலம்.

The poverty of the learned is better than the wealth of the unlearned.

1497. கல்வி அழகே அழகு.

The beauty of learning is (true) beauty.

1498. கல்வி என்ற பயிருக்குக் கண்ணீர் என்ற மழை வேண்டும்.

The rain of tears is necessary to the harvest of learning.

"*There is no royal road to learning.*"

1499. கற்பித்தவன் கண்ணைக் கொடுத்தவன்.

He who teaches is a giver of eyes.

1500. கற்றதைக் காய்ச்சியா குடிக்கப்போகிறாய்.

Do you boil and drink your own learning?

Refers to many learned pundits in India who keep their wisdom to themselves.

1501. கெடுக்கினும், கல்வி கேடுப்படாது.
Whatever else may be destroyed, learning will not be destroyed.

1502. கை உண்டாவது கற்றவர்களுக்கு ஆமே.
Only the learned possess hands (*i.e.*, ability).

1502*a*. சாவாமல் கற்பதே கல்வி, பிறர் இடத்தில் ஏகாமல் உண்பதே உணவு.
That is learning which teaches you to escape death, and that is food which is eaten without your going to others (to beg it). 1473.

1502*b*. நீட்டு வித்தை ஏறுமா ?
Will learning long drawn out be worth much ?

1503. நுனியில் மேய்கிறது.
To graze on the tops (of herbs).

Said of one who has superficial knowledge only ; or of one who, though he possesses only superficial knowledge, talks as if he knew everything.

1504. பழிப்பான கல்வி பாவத்தின் ஊற்று.
Faulty knowledge is the source of sin.

1505. வித்துவானுக்கு எது பரதேசம்.
What land is foreign to a learned man ?

His learning fits him to live in any country.

1506. வைத்தியம், ஜோசியம், சங்கீதம், மந்திரம் தெரியாதவர்களில்லை.
Everyone knows something of doctoring, astrology, music and exorcisms.

1507. வைத்தியன் காய்கறிக்குப் போனதுபோல.
Like the doctor who went to buy vegetables. 1487.

His learning made him criticise everything and buy nothing.

" *Gentry sent to market will not buy one bushel of corn.*"

N.B.—As these aphorisms (for very few of them are *proverbs*) on learning abound in Hindu literature, a few only are given. They might be multiplied indefinitely.

BLESSINGS.

ஆசீர்வாதம்.

1508. ஆல்போல் விழுது விட்டு, அறுகுபோல வேர் ஓடி, மூங்கில்போல சுற்றும் முசியாமல் வாழ்ந்திருப்பீர்கள்.
May you prosper without fail, sending down fresh stems like a Banyan tree, taking root like the spreading *Arugu* grass, and surrounded (by friends) like a Bamboo (surrounded by other Bamboos). 2595.

" Happy man and beauteous bride,
Be this place your home of pride !
Loving man and dutious wife,
In peaceful union pass your life !
May prattling children fill your home with peace,
And lisping babes their grand-sire's bliss increase ! "

DUTT : " *Lays of Ancient India.*"

1509. என் வயசு போட்டுக்கொண்டிரு.

May you take my age upon you.

i.e., May you live to be as old as I am! Said by an old man to young people.

1510. கெடுப்பதும் வாயால், படிப்பதும் வாயால்.

With the mouth you injure others, and with the mouth you read (the Vedas). 1511.

1511. சீச்சீ என்கிறதும் இந்த வாய்தான், சிவ சிவா என்கிறதும் இந்த வாய் தான்.

With the same mouth you say 'Fie, Fie,' and 'Siva, Siva.' 2443, 2501, 2689.

"*With the tongue bless we God, and therewith curse we men.*" (James 4, 9.)

1512. திட்டிக் கெட்டாருமில்லை, வாழ்த்தி வாழ்ந்தாருமில்லை.

No man was ever ruined by being cursed, and no one ever prospered because he was blessed. 3125.

"*No one dies of threats.*"

1513. பதினாறும் பெற்று, பெருவாழ்வும் வாழ்கிறது.

May you have sixteen children and live most prosperously.

"*One year of joy, another of comfort, and all the rest of content.*"

1514. மார்க்கண்டாயுசாயிரு.

May you always be of the age of *Markandeya* (*i.e.*, always be a youth). 2216.

Markandeya was the sage who was the author of the sacred book called the Markandeya Purana, he was fated to die in his 16th year; but through severe penance and invocation of Siva secured everlasting youth.

"*So that thy youth is renewed like the eagle's.*" (Psalm 123, 5.)

CURSES.

சாபம்.

N.B.—"There are four measures of good, but nine of filth in this world." (3014.) So says a proverb and it is emphatically true that Tamil curses are more numerous than Tamil blessings. A few common curses are subjoined.

1515. இடி விழுவான்.

May he be struck dead!

1516. உன் இழவு எடுக்க.

May your funeral take place!

1517. உன் வாயிலே மண் விழ.

May earth fall into your mouth!

i.e., May you die!

1518. உன்னைப் பாடையிலே வைத்துப் பிரயாணம் (com. பயணம்) இட.
May you be laid on the bier, and take your journey!
i.e., May you be carried to the burning-ground!

1519. உன் தாலி அறுந்து தண்ணீர் பானையில் விழ.
May your *thâli* be cut off and fall into a water pot!

1520. உன் பெண்சாதி தாலி பிணத்தின்பேரில் விழ.
May your wife's *thâli* fall on your corpse!
May you die and your wife be left a widow!

1521. உன் பிள்ளையைத் தின்று, தண்ணீர் குடிக்க.
May you have to eat your own child, and drink water after it (*i.e.*, digest it)!

1522. உன் எண்ணத்தில் எமன் பூர.
May *Death* blight your prospects!

1523. உன் கொண்டை குலைய.
May your hair be dishevelled!
i.e., May you have to mourn for the death of your husband! In India a widow is condemned to a life of wretchedness.

1524. உன்னை வெட்டி பலிபோட.
May you be cut down and sacrificed!

1525. உன்னை அள்ளத்துள்ள கொண்டுபோக.
May you be taken away while you struggle for life!

1526. உன் பொங்கு குங்க.
May your pride be brought down!

1527. உன் மதம் மண்ணுய்ப்போக.
May your pride become dust!

1528. உன்னை ஒண்டிப் பாடை கட்ட.
May you go to the grave alone!
Hindus believe that when one man dies, another one also dies somewhere else. In using this saying the speaker expresses a wish that the person addressed may not have any such comrade at the hour of death.

1529. ஓரம் வெளுத்து, ஒரு பக்கம் செல்லு அரிக்க.
May your lips be bleached white, and white ants gnaw one of your sides!

1530. கட்டையிலே வைப்பான்.
He will be laid on his funeral pile!

1531. தொண்டையிலே கண்டமாலை புறப்பட.
May scrofula come out on your neck!

1532. மாரியாத்தாள் குழியில் மறைத்துவைக்க.
May you be hidden in the pit of the goddess of small-pox!

1533. பல்லிலே பச்சரிசி வைக்க.
May raw rice be put into your mouth!
Rice is put into the mouth of a corpse during the funeral ceremonies.

1534. வஞ்சனை நெஞ்சு அடைக்க.
May your deceit choke you!

IMITATION.

1535. அன்ன நடை நடக்கப்போய், தன் நடையும் கெட்டதுபோல.
Like the man who tried to walk like a swan, and thereby lost his own way of walking. 3325.

This proverb has a wide range of application all over the world. It is especially applicable to India where the transition from an old civilization to a new is so marked. Tamils describe a person who follows the new fashions as இரண்டாம் கெட்டான், 'He is spoiled a second time,' or திரிசங்கு ராஜா போல 'He is like king Trisanku.' Trisanku did much good to the Rishi Viswamitra, in return for which Viswamitra tried to elevate Trisanku in his mortal body to heaven. But the Gods were unwilling to receive him and a compromise had to be made between the Gods and Viswamitra, by which Trisanku was left suspended between heaven and earth. (*Vishnu Purana*, Book 4, Chap.3.)

"*Apes are never more beasts, than when they wear men's clothes.*"

1536. ஆமையுடன் முசல் முட்டை இடப்போய் கண் பிதுங்கி செத்ததாம்.
It is said that when a hare went with a turtle to lay eggs, its eyes bulged out and it died.

Cf. The story in "Aesop's Fables" about the frog that tried to make itself as big as an ox, but burst in the effort.

1537. ஊர் ஒக்க ஓடவேண்டும்.
Agree with the village and go on your way!
Do as others do, and you will be safe!
"*You must do at Rome as Rome does.*"

1538. கண்ட பாவனையாய்க் கொண்டை முடிக்கிறது.
Arranging her hair in imitation of others.
Also said of a person who takes undue liberties with strangers, as if he were an old friend.

1539. தாயில்லாதவனுக்கு ஊர் எல்லாம் தாய்.
The whole village will be a mother to a motherless child. 1483.

The story goes that a certain man who was headman or judge in his village quoted this proverb in order to console his younger brother after the death of their mother. The younger brother, who was a great fool, succeeded his brother in the office of headman or judge in due time, and as it was his principle to imitate the doings and sayings of his brother matters went on well for a time. But one day a man whose wife had died came to him for consolation and he, mindful of the way in which his elder brother had comforted him when their mother died, quoted the above saying adapting it to circumstances thus:—

1539*a*. உன் பெண்சாதி ஊருக்கும் எல்லாம் பெண்சாதி, எனக்கும் பெண் சாதி அல்லவா?

Was not your wife the wife of the whole village, and was not she my wife?

It need hardly be said that this was no consolation to the bereaved husband. The whole story is a satire of senseless imitation.

1540. நீர் ஓட்டத்தில் தெப்பம் செல்லும் தன்மைபோல.

Like a raft that goes with the current.

"*It is hard striving against a stream.*"

1541. பங்காளத்து நாய் சிங்காசனம்மேல் ஏறினது என்று வண்ணான் கழுதை வெள்ளாவி பானையில் ஏறினதாம்.

It is said, that a washerman's ass having seen a Bengali dog ascending a throne mounted it's master's washing pot (and broke it).

When inferiors ape their betters, ruin is the result.

1542. பார்ப்பாரைப் பார்த்துப் பரதேசம் போகிறதுபோல.

Like looking at others and going a pilgrimage.

Primarily used of imitation of a good example, but also used of those who follow a bad example, and sometimes applied to young Hindus who imitate European customs and habits.

"*He that for the new way leaveth the old way, is often times found to go astray.*"

1543. புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக்கொண்டதுபோல.

Like the cat who saw a tiger and branded itself (so as to be striped like the tiger)!

Persons in inferior stations in life should not try to imitate the great lest they hurt themselves.

"*Borrowed garments never fit well.*"

1544. மயிலைக் கண்டு வான்கோழி ஆடினதுபோல.

Like the turkey who saw a peacock and danced!

"*An ape is ne'er so like an ape as when he wears a doctor's cap.*"

Cf. 2324 *ff.*

FLATTERY.

மெச்சல்.

1545. அங்கும் இருப்பான், இங்கும் இருப்பான், ஆக்கின சோற்றுக்குப் பங்கும் இருப்பான்.

He is there and he is here, and he is sure to come for his share of food. 606, 1057.

Some persons by carrying tales of different people to their enemies, gain favour from both parties. This proverb is said sarcastically about such busy-bodies.

"*Like a dog in a fair: here, there, everywhere.*"

1546. *அம்பாத்தூர் வேளாண்மை யானை கட்டத்தாள், வானமுட்டும் போர்; ஆறுகொண்டது பாதி, தூறுகொண்டது பாதி.*

In the harvest at Ambattur (village) the stubble (was strong enough) to tie up an elephant, and the stacks reached the sky; but a flood carried off half, and the jungle took half.

The story goes that when the tax-collector came to assess the village crops, the village headman uttered the first part of this proverb as a description of the good harvest. But a farmer held up his hand in such a way as to show the village headman his golden ring, signifying that a heavy bribe would be paid to him if the taxes were remitted, so the headman added the second part of the proverb—for it was more important to please the farmers of the village than to give an exact return to the collector.

" *He hath a conscience like a cheverel's skin, that will stretch.*"

1547. *அரசன் ஒன்றை இகழ்ந்தால் ஒக்க இகழவேண்டும், ஒன்றைப் புகழ்ந்தால் ஒக்கப் புகழவேண்டும்.*

If a king speaks and contemns anything, you must contemn it likewise; if he praises anything, you must praise it likewise.

" *Like a miller, he can set to every wind.*"

1548. *அரசன் கல்லின்மேலே கத்திரி காய்க்கும் என்றால், கொத்து ஆயிரம் குலை ஆயிரம் என்பார்கள்.*

If the king says, the *brinjal* (vegetable) will grow on stones; the people will say, in thousands of bunches, in thousands of clusters.

" *A flatterer's throat is an open sepulchre.*"

1549. *அவன் நடைக்குப் பத்துப்பேர் வருவார்கள், கைவீச்சுக்குப் பத்துப் பேர் வருவார்கள்.*

Ten people will imitate his style of walking, and ten others will swing their hands like him. 3439.

Said in flattery of or irony about an ugly person.

1550. *உற்றார் தின்றால் புற்றாய் விளையும், ஊரார் தின்றால் பேராய் விளையும்.*

If one's own people are fed, an anthill grows up; but if the villagers are fed, your reputation will grow. 1553, 1565, 3196.

1551. *அவன் சூத்தைத் தாங்குகிறான்.*

He supports that man's breech.

Said of one who flatters to please, or *காக்காய்ப் பிடிக்கிறது*, he is catching crows.

1552. *இலுப்பை சக்கரை கொடையாம், துரைகள் மெச்சின நடையாம்.*

Flattery of gentlemen is the way to get common sugar as a gift.

Said in ridicule of one who takes pains to please a great person, and gets little by it.

1553. உடல் மெச்சப் பால் குடிக்கிறாயா? ஊர் மெச்சப் பால் குடிக்கிறாயா?
Do you drink milk to please your body or to please the village? 1550, 1565, 1583, 2146, 2147, 3193.

"*He that doth good for praise only, meriteth but a puff of wind.*"

1554. உனக்கு உட்பட்டுப் பின்பாட்டுப் பாடுகிற மனிதர்கள்போல்.
Like people who depend on you, and therefore sing after you.

"*To dance to every man's pipe.*"

1555. எச்சிற்கல்லைக்கு இச்சகம் பேசுகிறது.
To flatter for a leaf-plate! 1562, 1563.

Flattery for something worth nothing!

"*The coin most common is flattery.*"

1556. எடுப்பார் கை குழந்தை.
He is a baby (who goes) to anyone who will take him!

One who yields to everybody.

"*To turn with the wind and tide.*"

1557. கூத்துக்கு எற்ற பந்தம் பிடிக்கிறது.
Holding the torch according to the movements of the dancer.

"*He has a saddle for every horse.*"

1558. கொடுத்தால் ஒரு பேச்சு, கொடுக்காதேபோனால் ஒரு பேச்சு.
If you give to him, he will speak one word (favourably); if you refuse him, he will speak one word (contrarily). 260.

1559. சூத்து இல்லாத குடுவை.
A gourd without a bottom to stand on!

The bottle gourd has no flat end to stand on, and rolls this side and that without any steadiness. People who spend their lives in seeking the favour of others have to yield in all things to all whom they want to please, and are thus like the unsteady gourd.

"*An empty bag cannot stand upright.*"

1560. சூத்துக்குத் தடுக்குப் போட்டுச் சுற்றிக்கொண்டு திரிகிறது.
Going round (a great man) to push his mat under him. 1561.

Obsequiousness.

1561. தடுக்குத் தள்ளி பேச்சுப் பேசுகிறது.
Pushing the mat under him and speaking (to him). 1560.

Hindus often sit on a little square mat. One who wants a great man's favour, will wait to place this mat wherever it is required to get the chance of a word with him.

"*To dance attendance on one.*"

1562. மெச்சிக்கொள்ள, எச்சிலை எடுக்கிறது.
To get praise he will remove the leaf-plates that have been used. 1555, 1563.

Said of one who will do the most menial acts to earn the favour of the great.

"*Set your sail according to the wind.*"
"*You have a handsome head of hair; pray give me a tester.*"

1563. மொத்தை சோற்றுக்கு மேளம் அடிக்கிறான்.
He beats a drum to get a mouthful of boiled rice. 1555, 1562.
"*Cringing is a gainful accomplishment.*"

1564. வாழைப்பழம் கொண்டுபோனவள் வாசலில் இருந்தாள், வாயைக் கொண்டு போனவள் நடுவீட்டில் இருந்தாள்.
She who brought a plantain (banana) sat at the entrance; she who brought her mouth sat in the middle of the house. 2776.

The first woman brought a gift but she was left outside. The second was a false friend but she could flatter and she therefore got a seat of honour.

"*Flattery sits in the parlour, when plain dealing is kicked out of doors.*"

"*All doors open to courtesy.*" "*They love most who are least valued.*"

1565. வீட்டுக்குப் புகழ்ச்சியோ, நாட்டுக்குப் புகழ்ச்சியோ?
(Is one to seek) praise at home or abroad? 1550, 1553.

SELF-PRAISE.

தற்புகழ்ச்சி.

1566. அவன் கையைக்கொண்டே அவன் கண்ணில் குத்தினான்.
He struck his own eyes with his own hand!

i.e., He cleverly managed to do harm to his opponent by the means on which he depended. Also said of a person who ruins an enemy, but does it so cleverly that no blame attaches to himself.

1567. ஆகாசத்தை வடுப்படாமல் கடிப்பேன் என்கிறான்.
He says he can bite the sky without leaving a scar in it. 1808, 2556.
"*Your trumpeter's dead, and so you blow your trumpet yourself.*"

1568. உள்ளங்கையில் வைகுண்டம் காட்டுகிறேன்.
He will show you heaven (*Vaikuntham*) in the palm of his hand!
"*Great boast and small roast.*"

1569. எனக்கு எதிரில்லை, நெல்லுக்குப் பதரில்லை.
No adversary for me, and no chaff in my rice!

i.e., I am not afraid of foes or misfortune.

1569*a*. உன் காரியம் முப்பத்திரண்டிலே!
Your case lies in thirty-two! 1573.

Said to one who praises himself, signifying that he is worthless; after his death all his affairs will come to light, the *Karmantiram* funeral ceremony for him will be performed on the thirty-second day after his death. This ceremony should be performed on the tenth day after the death of a Brahmin, on the twelfth day after the death of a Kshattriya or Vaisya, on the sixteenth day after the death Sudra. The saying is therefore a wish that a man's affairs may all be in confusion at his death, or that dishonour may put an end to all his self-complacency.

1570. என்னைப்போலக் குரலும், என் அக்காளைப்போல ஒயிலும் இல்லை என்கிறதாம் கழுதை.

The ass says that no one has a voice (for singing) like his, and no one has gait like that of his eldest sister!

"*Did you ever before hear an ass play upon a lute?*"

"*Every ass loves to hear himself bray.*"

1571. குப்புற விழுந்தாலும், மீசையிலே மண் படவில்லை என்கிறான்.

Though he fell flat on his face, he says that his moustache was not soiled!

Even at the moment of defeat he finds a reason for self-complacency.

"*There is no such flatterer as a man's self.*"

1572. குலைக்கிற நாய் வேட்டைப் பிடிக்காது.

A barking dog is not fit for hunting. 1576.

Said of one who is too full of brag to succeed in anything.

"*A barking dog seldom bites.*"

1573. கோழி கூவி விடிகிறதா?

Does day dawn because the cock crows? 489, 1565, 2559.

Said of one who thinks himself very important.

"*Daylight will come, though the cock do not crow.*"

1574. செத்தால் பிழைக்கமாட்டான்.

If he dies (it is because) he is determined not to live.

Applied sarcastically of one who boasts of the great deeds he can do.

"*When you die, your trumpeter will be buried.*"

1575. செல்வப்பெண் சீரங்கநாயகிக்குச் சீதனம் வந்ததாம் வறையோடு.

A potsherd was sent as dowry to the petted goddess of Srirangam.

Said to one who boasts about riches he has not got. Instead of வறையோடு the common people insert a very obscene word.

1576. துள்ளுகிற மாடு பொதி சுமக்காது.

A frisky bullock will carry no burden. 1572.

1577. துள்ளாதே துள்ளாதே குள்ளா! பக்கத்தில் பள்ளம் அடா!

Oh dwarf, don't jump for joy; there is a ditch close by!

Don't boast too much; some one may accept your challenge.

1578. துள்ளித் துள்ளித் தொப்பென்று விழுகிறாய்.

If you frisk about too much you will fall headlong.

Do not abuse people too much; you may fare badly yourself.

1579. நான் வாழ்ந்த வாழ்வைச் சொல்லுகிறேன், அண்டை வீட்டுக்காரனிருக்கிறானா, பார்?

I will tell you the story of my life; but go and see if my neighbour is at home.

Said of one who is willing to speak about himself, but he wants to make sure that his neighbour is not at hand to check his self-glorification, by the recital of facts.

" *He dwells far from neighbours who is fain to praise himself.*"
" *Every man's tale is gude till another's be tauld.*"

1580. பொரிமாவை மெச்சினான் பொக்கைவாயன்.

A toothless person praises the flour made from parched rice.

Every man praises what he himself is able to enjoy or master or which suits him.

Cf. 1794 *ff.* 2108 *ff.*

DIGNITY, SOCIAL IMPORTANCE.

பெருமை, கனம், மானம், பேர்.

1581. அக்கிராரத்து நாய் பிரதிஷ்டைக்கு அழுததுபோல.

Like a dog belonging to a Brahmin street weeping for (*or* hankering after) honour. 858.

A dog in a Pariah village used to visit a dog in a Brahmin village, and enticed it to enter the Pariah village by saying:—" You can get neither meat nor bones from vegetarian Brahmins; come to my place and you shall have both." The other replied:—" I prefer this place, for here I have the great honour of being called the father of Brahmins. For when the Brahmins quarrel they call each other Son of a dog, நாய் மகன்!" A sarcasm on those who have false ideas of dignity.

" *Desire of glory is the last garment that even wise men put off.*"

1582. அரைப்பணம் சேவகமானாலும், அரண்மனை சேவகம் போலாகுமா?

Is there any service like service in a palace, though the wages there be only half a *fanam?*

The honour of serving a king is great though the pay may be small.

1583. ஆண்டிக்குக் கொடுக்கிறாயோ? சுரைக்குடுக்கைக்குக் கொடுக்கிறாயோ?

Do you give to the mendicant or to the gourd? 1553.

i.e., Give in order to do good, and not to get praise for your charity. The 'gourd' is a vessel in which alms are received by a mendicant.

1584. என் மூக்கை முன்னுக்குக் கொண்டுவா.

Bring my nose forward! 879.

A curious phrase. The allusion is to the mutilation of a faithless wife by her husband. Sometimes the adulteress' mother was mutilated also. Hence when a girl was leaving home for her husband's house after marriage, her mother would use this saying meaning 'Be careful to bring credit to me; don't do anything that will make your husband cut my nose off.' It is now used by a superior to an inferior as an warning to behave himself, lest he bring disgrace on his master.

1585. ஏன் பறையா! என்கிறதை விட, வள்ளுவ பறையா என்கிறது மேல்.

Instead of saying simply "*Pariah,*" why not say "*Valluva Pariah*"? 678.

A *Valluvan* is a Pariah-priest, but both live in the Pariah village and both are Pariahs. A title does not raise a low man.

"*Vain glory blossoms but never bears.*"

"*What good can it do to an ass to be called a lion.*"

"*Fame is a magnifying glass.*"

1586. ஒன்றுமற்ற நாரிக்கு ஒன்பதுநாள் சடங்கு, அதுவுமற்ற நாரிக்கு ஐம்பதுநாள் சடங்கு.

A ceremony lasting nine days for a worthless woman, and a ceremony lasting fifty days for one still worse.

The allusion is to the long festivals that the parents of a deformed girl will hold in order to get her married. The lamplight and bustle of the festival prevent anyone from noticing her defects, and a marriage may be arranged before anyone knows that there is anything wrong with her. The proverb is said of people who seek honour and respect, but do not deserve it.

1587. கட்டோடே போனால், கனத்தோடே வரலாம்.

If you go with a load, you may return with honour. 347.

i.e., If you take presents with you you will be well received.

"*He that bringeth a present findeth the door open.*"

1588. கம்மனாட்டி (கைம்பெண்டாட்டி) பிள்ளையானாலும் செய்யும் சடங்கு செய்யவேண்டும்.

Though the son of a widow, all the proper rites should be performed for him.

Even an illegitimate child, when a bridegroom, should be fully honoured. This saying is often quoted in reply to a man who urges caution in some expenditure.

1589. கனத்திற்கு நற்குணம் சுமைதாங்கி.

Virtue is the support of dignity.

The 'support' referred to in the proverb is the erection of stone, brick or wood, by the road-side upon which coolies, and others who carry loads on their heads, may rest their burdens.

"*From our ancestors come our names, but from our virtues our honours.*"

1590. காலிலே கட்டினால் விருது, குப்பையில் கிடந்தால் துணி.

If tied round the leg it is a trophy, if lying on a dunghill it is only a rag. 1595, 1602.

A man is honoured according to the work he does, or according to his position, and not according to his intrinsic worth.

1591. காறி உமிழ்ந்தவர்களைக் (com. காறி முழிந்தவர்களை) கண்டீர்களா? அங்கே ஒரு தட்டு வைத்தீர்களா?

Did you see those persons who were spued out, or did you place a tray before them?

Said of one who is of low caste, or is very poor, or has a bad character yet wants to be honoured; or said to one who wants to honour such a person. Also said of two persons who blame each other for the faults common to both. The tray referred to is the tray of betel leaves, sandal-paste, rose water, &c., placed beforo a guest as a mark of honour.

1592. கும்பிடு கொடுத்து, கும்பிடு வாங்குகிறதா?

Do you make a bow to get a bow?

Said of those who cringe in order to get into the society of their superiors.

1593. குன்றுமேலிட்ட விளக்கைப்போல்.

Like a lamp on a hill. 2624.

Said of one who is widely honoured.

1594. கோவில் மணியம் என்கிற பேர் இருந்தால் போதும்.

If I can only get the title of Manager of the temple, I shall be satisfied.

Said of a person who longs for honours and titles.

" *A rose called by any other name would smell as sweet.*"

1595. சங்கிலே விட்டால் தீர்த்தம், மொந்தையிலே விட்டால் தண்ணீர்.

If water is poured into a conch, it is sacred water; if poured into an earthen pot, it is common water. 1353, 1590, 1602.

1595*a*. நாட்டான் பெண்சாதி என்றால் என் என்பாள், நாலுபேருக்குச் சோறு என்றால் ஊம் என்பாள்.

When they say she is the headman's wife, she is pleased; but when they say, she must give her four labourers their wages, she is glum.

Said of one who magnifies his authority to the utmost, but will not give just wages to those who work for him.

1596. பத்துப்பேரிலே பதினோராம்பேராய் இருக்கவேண்டும்.

Be the eleventh person among ten.

i.e., Do not seek to be honoured; or if you require special notice, separate yourself from the rest.

1597. புழுக்கைச்சிமேல் சன்னதம் (தெய்வம்) வந்தால், பூ இட்டுக் கும்பிட வேண்டும்.

If an oracle inspires a slave girl, you should present flowers to her and worship her. 1601.

People of low birth are not to be despised if they obtain greatness.

1598. போலை நாரி வாடி (வா அடி), காடிமேல் ஏறடி!

Come shameless lassie! Climb into the cart!

Said sarcastically to one who seeks the place of honour everywhere without being invited.

1599. வாதுக்கு ஆடின தம்பன் (or தேவடியாள்) வயசு சென்றால் கழுதை மேய்ப்பான் (or மேய்ப்பாள்).
When the acrobat (*or* dancing-girl) who acts to the admiration of all becomes old, he (*or* she) will herd asses!

1600. விருதுக்கா வேட்டை ஆடுகிறது?
Do you hunt for the sake of the trophy?

1601. வெள்ளாட்டிக்குச் சன்னதம் வந்தால், விழுந்துதான் கும்பிடவேண்டும்.
If an oracle inspires a maid-servant, you should fall at her feet and worship her. 1597.

When God works through a person look at the good in him, and not at his former social position.

1602. வைத்தியன் கொடுத்தால் மருந்து, இல்லாவிட்டால் மண்ணு.
If the doctor gives it, it is medicine; if not, it is only earth. 1356, 1590, 1595.

SHAME, CONTEMPT, DEPRECIATION.

வெட்கம், அவமானம், அசட்டை.

1603. அவன் கொஞ்சப் புலியா?
Is he an insignificant tiger?

Don't despise anyone for his apparent insignificance.

1604. அவன் உனக்குக் கிள்ளுக்கீரையோ?
Do you take him to be a soft vegetable?

1605. ஆயிரம் குதிரையை அறவெட்டின சிப்பாய்தானு இப்போது பறைச்சேரி நாயோடே பங்கமழிகிறான்.
The soldier who cut down a thousand horsemen is now living in disgrace along with the dogs of the Pariah village!

1606. குளம் (or ஆறு, or ஏரி, or கடல்) எத்தனை சூத்தைக் கண்டதோ? சூத்து எத்தனை குளத்தைக் கண்டதோ?
How many breeches has the pool (*or* river, *or* sea) seen? How many pools has your breech seen?

Refers to the Hindu practice of washing in rivers or tanks after obeying the calls of nature. A servant uses this, meaning that he has had many masters, and many masters have had him.

1607. எண் ஜாண் உடம்பு ஒரு ஜாண் ஆனேன்.
My eight span body became one span.

i.e., I was put to shame.

1608. என் பிழைப்பு (or பேச்சு or பவிஷு) சிரிப்பாய்ச் சிரிக்கிறது (or காறி முழிக்கிறது) தெருவிலே.
My livelihood (*or* my word, *or* my respect) is ridiculed (*or* has been spat out) in the street.

All laugh at me; all despise me.

1609. கண்டவர்களுக்குக் கனம் குறைந்தேன், பார்ப்பவர்களுக்குப் பதம் குறைந்தேன்.

I have lost my respect before the public, and my honour has decreased before spectators.

1610. கந்தையை அவிழ்த்தால், சிந்தை கலங்கும்.

If he unties his rags you will pity him. 1613.

If a man's inner character or the secret history of any family or policy is revealed, there is always something to be pitied in it.

" *There is a skeleton in every man's cupboard.*"

1611. காய்ந்த சுண்ணாம்பையும், வதங்கின வெற்றிலையையும், இளைத்த ராஜாவையும் விடக்கூடாது.

Don't give up a bit of dried lime (used in chewing betel), nor withered betel leaves, nor a reduced king.

Any of these may afterwards be of great advantage.

1612. சுவர்க்கீரையை வழித்துப்போடடி, சுணைகெட்ட வெள்ளாட்டி.

Oh, you shameless woman, scrape the vegetables off from the wall and give them to me!

